# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆடி 31
றம்zான் பிறை 11
புதன் (16-8-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 22

விலை சதம் 35


பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான 'இம்மத் இதழில்' (Himmat) அண்மையில் சிங்கப்பூரைச் சேர்ந்த திரு. எம். ஆர். ஆர். ஹூல் (M.R R. Hoole) என்பவர் 'Autonomy For Tamils' 'தமிழர்களுக்குச் சுயாட்சி' எனும் தலைப்பில் எழுதியிருந்த ஆங்கிலக் கடிதமொன்றின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

# ஈழத் தமிழர்கள் பிரச்சினையில்

# ஜே. ஆர். கபட நாடகமாடுகிறார்!

## அவர் உண்மையான 'அரசியல்ஞானி' என்றால் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கட்டும்!

## 'இம்மத்' இதழில் சிங்கப்பூர் வாசி சவால்!

"1978ம் ஆண்டு மே19ம் திகதி வெளியிடப்பட்ட 'ஹிம்மத்' இதழில் "எங்கள் ABC அயலவர்கள்" என்ற பகுதியில், இலங்கையிலிருந்து கிடைக்கும் செய்திகள் நல்லவையாக இருப்பதாக திரு. ராஜ்மோகன் காந்தி குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் முக்கிய அயல் நாடொன்றைச் சேர்ந்த அறிஞர் ஒருவர்-அதுவும் திரு.காந்திபோன்ற தூரதிருஷ்டி வாய்ந்த ஒருவரே இப்படி மடையராக்கப்படுவாரென்றால்- இலங்கை அரசும் இலங்கை பத்திரிகைகளும் தவறான கருத்தைப் பரப்புவதில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளன என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. திரு. காந்தி இலங்கைக்கு நேரே சென்று [illegible] நிலைமைகளை விசாரித்து அறியமுயற்சிக்காமல், இந்தியப்பத்திரிகை நிருபர்களேயேநம்பி அமைச்சர்களையும், அதிகாரிகளையும் மேற்கோள் காட்டியிருக்கிறார். சுருக்கமாகக் கூறப்போனால் இலங்கையில் நடப்பது. இது தான்.

1977 ஆகஸ்ட் கலவரத்தின்போது14,000 தமிழ் அகதிகளை கவனித்து உதவிய தமிழ் அகதிகள் மறுவாழ்வுச் சபையின் அறிக்கையின்படி 300 கொலைகள் நிகழ்ந்துள்ளன; 1500 பேர் உயிராபத்து மற்றும்கற்பழிப்புக்குள்ளாக்கப்பட்டனர்; 2500 பேருடையே வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன; 4000கொள்ளைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன, திரு.ஜெயவர்தனவும் அவரது ஆட்சியும் இச்சம்பவங்கள் எதுவும் நடைபெறாததுபோல கபடநாடகமாடுகின்றனர்.

பண்டாரநாயகா ஆட்சியில் நடைபெற்ற ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணை அரசாங்கக் கட்சியைச்சேர்ந்த அரசியல்வாதிகளின் கபடத்தனமான பிரசாரங்களால் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது: ஆனால் 1977 ஆகஸ்ட் வன்முறைச் சம்பவங்கள் பற்றி சன்சோனி ஆணைக்குழு நடத்தும் விசாரணை இருட்டடிப்பு செய்யப்படுகிறது.

சிங்களப் பொலீஸ்படையும், மற்றும் ஆயுதப்படையினரும் தமிழர்கள் மீது கொண்டுள்ள கொலை உணர்ச்சி நிறைந்த வெறுப்புப் பற்றி சன்சோனி ஆணைக்குழு விசாரணைகள் பேசுகின்றன. உயர் பொலிஸ் அதிகாரிகளின் ஏமாற்றுத்தனத்தையும், தனிப்பட்ட முறையிலும், பொதுத்துறையிலும் அவர்கள் செய்த நம்பிக்கைத் துரோகத்தையும் பற்றி அது எடுத்துக்கூறுகிறது. தூண்டிவிடுவதிலும், வதந்திபரப்புவதிலும்பொலீசார் தீவிரமாக ஈடுபட்டிருந்தது பற்றியும் அது கூறுகிறது. முன் சொல்லப்பட்ட பெரும்பாலான கொலைகளுக்கு அவர்களே பொறுப்பேற்கவேண்டியவர்கள்.

'இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்கள் குறித்து எவ்வளவோ பேசப்பட்டுவிட்டன; எனினும், அரபுப்பாடசாலையொன்றின்மீது நடைபெற்ற கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சையடுத்து இஸ்ரேலிய அரசாங்கம் மேற்குக் கரையோர ஆளுனரை பதவியிலிருந்து வெளியேற்றியுள்ளது கவனிக்கத்தக்கது.'இஸ்ரேலின் அதிகாரபூர்வமான அறிக்கைகளை நம்பாத ஒரு நிருபர் தந்துள்ள தகவல் இது. இலங்கையில் அப்படியான பத்திரிகை நிருபர் ஒருவர் இருக்கமுடியாது.

திரு. ஜெயவர்த்தன. திரு. பெகினைப்போலவன்றி, உலகப் பத்திரிகைகளால் ஒரு அரசியல் ஞானியென்று கட்டியெழுப்பப்பட்டுள்ளார்.ஆனால் இலங்கையிலோ குற்றம்புரிந்த பொலீசார் அப்படியே பதவிகளில் தொடர்ந்துவைக்கப்பட்டி

—4ம் பக்கம் பார்க்க

### 20-8-78 ஞாயிறு இதழில்...

எதிர்வரும் 20-8-78 ஞாயிறு இதழில் கியூபாவின் தலைநகரான 'ஹாவனா'வில் நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் கலந்து கொண்டு கவிஞர் காசி ஆனந்தன் ஆற்றிய உரையும் அவர் அங்கு பாடிய ஆங்கிலக்கவிதையின் தமிழாக்கமும் இடம்பெறும்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி வேலைகளில் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்று கூறிவரும் அரசாங்கம், சிங்கள மக்களை எமது பிரதேசங்களில் குடியேற்றும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறது. இம்மாதம் 14ம் திகதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கும் மதுறு ஓயாத் திட்டத்தினால் சுமார் ஒன்றரை இலட்சம் சிங்களவர் கிழக்கு மாகாணத்தில் குடியேறப்போகிறார்கள்.

"மதுறு ஓயாத்திட்டத்தினால் கிழக்கு மாகாணத்தில் 60,000 ஏக்கர் காணி விவசாயத்தில் ஈடுபடுத்தப்படப்போகின்றது. அதே வேளையில் 45000 ஏக்கரில் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தில் 15,000 குடும்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில்—குறிப்பாக கல்குடாத் தொகுதியில் குடியமர்த்தப்படப் போகின்றன.

"அது மாத்திரமல்ல — திருக்கோணமலையில் உள்ள யான் ஓயா திட்டம், மகாவிளாங்குளம் திட்டம், ஆகிய இரு அபிவிருத்தித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன. இங்கும் சிங்களவரையே அரசு குடியேற்றப்போகிறது. மதுறு ஓயாத் திட்ட வேலைகளும், திருக்கோணமலையில் நடைபெறும் இரண்டு அபிவிருத்தி திட்டங்களும் முடிந்தவுடன், தமிழர்கள் கிழக்கையே இழந்துவிடும் பேராபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால்தான் அண்மையில் நடந்த ஆவரங்கால் மாநாட்டில் நமது மண்ணைக்காக்கும் போராட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். எனவே இப்பகுதிகளில் உடனடியாகத்தமிழ் மக்கள் குடியேற வேண்டும். நிலமில்லாமலும், வீடில்லாமலும் அல்லலுறும் தமிழ் மக்கள் இப்பிரதேசங்களில் குடியேற வேண்டும். அதன் மூலமே நமது மண்ணை நாம் காப்பாற்ற முடியும்.

யூத இளைஞர்கள் தமது நிலத்தைக்காப்பாற்றுவதற்காக ஆயிரக்கணக்கில் தமது உயிரைப்பலி கொடுத்திருக்கிறார்கள். அதன் பின்னர்தான் அவர்கள் தமது தாய் நாட்டை மீட்டார்கள்.

## தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம்!

குடியேறும் இடங்கள் நமது எல்லைப் பிரதேசங்களாக இருந்தாலும் சரி அங்கேயும் நமது இளைஞர்கள் விட்டுக்கொடுக்கக்கூடாது. ஆனால் அரசாங்கமும் சும்மா இருந்துவிடப்போவதில்லை. சிங்களக்காடையர்கள் குடியேறும் மக்களைத் தாக்கத்தான் செய்வார்கள்; அதனால்தான் யூத இளைஞர்களைப் பின்பற்ற வேண்டும் என்று கூறினேன்;

—கொழும்பு ராமகிருஷ்ணா (சிறிய) மண்டபத்தில் 11.8.78 இரவு திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியது.


இப்பொழுது விற்பனையாகிறது!

மூதறிஞர்
தந்தை செல்வா
அவர்களின்

நினைவு மலராக

அன்னாரது அழகிய
வண்ண
முகப்போவியத்துடன்

சுடர்
CHUDAR

சித்திரை-வைகாசிஇதழ்
விலை ரூபா ஒன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்குறுதி காற்றில் பறந்தது! சர்வகட்சி மாநாடு புஸ்வாணமானது!!

## தமிழினத்தின் இறைமை யாருக்கும் தத்தம் செய்யப்படவில்லை

### தேசிய அரசுப் பேரவையில் அமிர்-2

இச்சபையிலே நேற்று உரையாற்றிய பிரதம அமைச்சரவர்கள் தமக்கு மக்கள் அளித்த கட்டளையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் புதிய அரசியலமைப்பொன்றை யாப்பதற்கு மக்களிடத்தில் கட்டளையைப் பெற்ருர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே சந்தேகத்திற்கிடமில்லாமல் அது இடம் பெற்றிருக்கிறது. நேற்று பிரதம அமைச்சரவர்கள் வாசித்தது போல அவர்களுடைய ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே, ஒரு சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு மக்களின் கட்டளையை அவர்கள் பெற்ருர்கள் என்பதை நாம் மறுக்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலே இந்நாட்டின் தமிழ் மக்களுடைய பிரச்சினையைப் பற்றி ஐக்கிய தேசியக்கட்சி அதனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பின்னர் அதன் கொள்கை விளக்கவுரையிலும் கூறியவற்றையும் நான் இங்கே வாசித்துக் காட்ட விரும்புகிறேன்;

"தமிழ் பேசும் மக்களை ஏராளமான பிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன வென்பதை ஐக்கியதேசியக்கட்சி ஏற்றுக்கொள்கிறது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த அலட்சியம் காரணமாக அவர்கள் தனிநாடு அமைக்கும் இயக்கமொன்றை ஆதரிக்குமளவுக்கு தள்ளப்பட்டுள்ளனர். தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம், நாடு முழுவதற்குமான பொருளாதார அபிவிருத்தி ஆகியவை நிலைத்திட தமிழ் பேசும்மக்களின் பிரச்சினைகள் தாமதமின்றித் தீர்க்கப்படவேண்டுமென்பதை ஐக்கியதேசியக்கட்சி ஏற்றுக் கொள்ளுகிறது. அதிகாரத்துக்கு வரும் பட்சத்தில் எமது கட்சி பின்வரும் துறைகளில் தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

(1) கல்வி;

(2) குடியேற்றம்.

(3) மொழியுரிமை.

(4) அரசாங்க சேவையிலும், கூட்டுத்தாபனங்களிலும் தொழில் வாய்ப்புக்கள்.

"ஒரு சர்வகட்சிமாநாட்டை விரைவாகக் கூட்டி அதில்எடுக்கப்படும் முடிவுகளை செயற்படுத்துவோம்!"

இந்த வாக்குறுதியை அரசாங்கக் கொள்கைவிளக்க உரையிலும் திரும்பக் கூறினர்கள்.

"My Government will summon an All party Conference and implement its decisions."

இந்த அடிப்படையிலே ஓர் அரசியலமைப்பை யாக்கத் தொடங்கமுன் அதற்கு முன்னேடியாக இந்த நாட்டிலேயுள்ள இரு தேசிய இனங்களுக்குமிடையிலான ஆளும் உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலே வழிவகைகளைக் கண்டிருக்கவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் தவறிவிட்டது. அந்த வகையிலே நடவடிக்கை எடுக்காது வேறு காரணங்களுக்காக அவசரத்தில் இந்த அரசியலமைப்பு யாக்கப்பட்டிருக்கிறது.

சபாநாயகர் அவர்களே, இந்த அரசியலமைப்பு யாக்கப்பட்ட பின்னணியை எடுத்துக் கூறிக்கொண்டு வருகின்ற இந்த சூழ்நிலையில் இந்த அரசியலமைப்பு விவாதத்தை ஒட்டி எமது நிலையை எடுத்துக்கூற கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் ஆரம்பத்தில் கூறியதுபோல இன்று நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தோம். அதை நிராகரித்தோம். அது எம்மைக் கட்டுப்படுத்தாது என்று கூறினேம். அதற்கு விரோதமாக மக்கள் தீர்ப்பைப்பெற்ரேம். அதை நிராகரித்த காரணம் இறைமை உள்ள ஒரு தேசிய இனமான தமிழ் தேசிய இனத்தின் சார்பிலே அவர்களின் சம்மதம் இன்றி ஓர் அரசியல் அமைப்பை யாக்கும் உரிமை இந்தச் சபைக்கு இல்லை என்பது எமது நிலை. அதைத் தெளிவாக இந்த இடத்தில் நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

ஓர் இனத்தின் இறைமையை மூன்று வகையில் தான் அழிக்கமுடியும். ஒன்று, ஓரினம் தானகச் சம்மதித்து அந்தச் சம்மதத்தின் பேரில் அதன்இறைமை இன்னெரு தேசிய இனத்தின் இறைமையோடு இணைந்து ஒன்றுபட்ட இறைமையாக அது அமைவது; அல்லது ஒரு தேசிய இனத்தின் இறைமை யுத்தக் களத்தில் அந்த இனம் வெற்றிகொள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்படுவதால் அதனுடைய இறைமை இல்லாதொழிவது; மூன்ருவதாக, அப்படியான சூழ்நிலையில் ஆக்கப்பட்ட அரசியல் அமைப்பின் கீழ் சட்டரீதியாக அந்த இறைமை இல்லை என்ற நிலை நிலைநாட்டப்படல்.

இன்றைக்கு இந்தத் தேசிய அரசுப்பேரவை இயங்குகின்ற அரசியல் அமைப்பு இந்த மூன்று துறைகளிலும் தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்த அளவில் செல்லுபடியற்றது என்பது எமது நிலை. ஆனபடியால் இந்தத் தேசிய அரசுப் பேரவைக்கு தமிழ் தேசியஇனத்தின் சார்பில் ஓர் அரசியல் அமைப்பை யாக்க உரிமை இல்லை என்பதைத்தான் கூறுகிறேம்.

அதனுல் தான் முன்பு அரசியலமைப்புக்கு இரண்டாவது. திருத்தம் கொண்டு வரப்பட்டபோது அந்த விவாதத்திற்கலந்துகொள்ள நாம் மறுத்தோம். அந்த விவாதத்தின்போது, தங்களுக்கு ஞாபகம் இருக்கும் சபாநாயகர் அவர்களே தங்களின் அனுமதியோடு இந்தச் சபையில் ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு நாங்கள் அந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல் வெளியேறினேம்.

அதன் பின் இந்த அரசாங்கம் அரசியலமைப்பைத் திருத்துவதற்காக தெரிவுக் குழுவொன்றை நியமித்தது. அந்தத் தெரிவுக்குழுவிலே நாங்கள் பங்குபற்றுவதா அல்லவா என்பதை நாங்கள் யோசிக்க வேண்டியவர்களாக இருந்தோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகள் எல்லோரினதும் சம்மதத்தின் அடிப்படையிலும் தீர்த்துவைக்கப்பட்டுஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முடிவின்பின் தெரிவுகுழு நியமிக்கப்பட்டிருந்தால், எமக்கு ஏற்புடையதானஒருதீர்ப்பை அமுல் நடாத்துவதற்கான ஓர் அரசியல் அமைப்பைத் தயாரிப்பதற்கு அந்தத்தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருந்தால் நாங்கள் அதிற் பங்கு கொள்வதுபற்றி யோசித்திருப்போம்.

ஆனுல், தமிழ்த் தேசிய இனத்தைப்பற்றியபிரச்சினைகள் குறித்து எவ்விதமுடிவும் எடுக்காத கட்டத்திலே எம்மை அந்தத்தெரிவுக்குழுவிலே கலந்து கொள்ளும்படி அழைத்த பொழுது நாம் அதிற்கலந்து கொள்ள மறுத்தோம்.

அந்த நேரத்திலே எமது தமிழர் விடுதலைக் கூட்டணியினது நடவடிக்கைக் குழு நிறைவேற்றிய தீர்மானம் அந்தக் காரணங்களைத்தெளிவாகக் காட்டுகிறது:

"தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் ஈழ விடுதலையைக்காண்பதேஇலட்சியமாகக் கொண்டுதெரிவு செய்யப்பட்ட காரணத்தினுலும்—

தேர்தலின் பின் இந்த நாட்டில் நடந்துமுடிந்த வன்முறைச் சம்பவங்கள் தமிழ்ஈழ இலட்சியம்தவிர வேறெதுவும் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பையும் நல்வாழ்வையும் தரமாட்டாதுஎன்பதை உறுதிப்படுத்துவதாலும்—

இவ்வன்முறைச்சம்பவங்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதையொட்டி அரசும் அதன் நிருவாக இயந்திரமும் மாற்ருன்தாய் மனப்பான்மையோடு நடந்து வருவதனுலும்—

தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பையும், அதன்பின்பு நாட்டில் நடந்த சம்பவங்களின் தாக்கத்தையும் கருத்திற்கு எடுத்து தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைத்தீர்க்க வேண்டும் என்றஆர்வமும் அவசரமும் அரசுக்குஇருப்பதாகத் தோன்ருதபடியாலும்—

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்விஞ்ஞாபனத்தின் அடிப்படையில்தானும் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு முன்பு சர்வகட்சி சம்மதத்தைப் பெற்று தமிழ்பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப் படாதபடியாலும்—

இச் சூழ்நிலையில்அமைக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக் குழு இந்த நாட்டிலுள்ள இருதேசியஇனங்களுக்குஇடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும் தகுதியோ சூழ்நிலையோ இருப்பதாகத் தோன்ருதபடியாலும்—

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பை மாற்றிஅமைப்பதற்கான தெரிவுக் குழுவில் கலந்துகொள்வதில் எவ்வித பயனும் இல்லையென்று இந் நடவடிக்கைக் குழு கருதி அக் குழுவில் கலந்துகொள்ள வேண்டாமென்று பாராளுமன்றக்குழுவைப் பணிக்கிறது."


எமக்கு எமது கட்சியினுடைய செயற்குழு இட்ட கட்டளைப்படி நாம் அந்தத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளாமல் விட்டோம். அந்தத் தெரிவுக் குழுவில் யாக்கப்பட்டதாகக் கூறப்படும் அரசியலமைப்புதிதான் இப்பொழுது இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

-மிகுதி 20.8.78ஞாயிறுஇதழில்

## அமெரிக்க பல்கலைக்கழகத்தில் ஈழவேந்தனின் நூல்

திரு. ஈழவேந்தன் அவர்கள் எழுதி சுதந்திரன் வெளியீடாக வந்த "தமிழ் மண் காப்போம் — தாயகம் மீட்போம்" எனும் நூல் அமெரிக்காவிலுள்ள பென்சிலவேனியாப் பல்கலைக்கழகத்தில் பேணிப்பாதுகாக்கப் படுகிறது. இத்தகவலை அண்மையில் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியுள்ள தந்தை செல்வாவின் புதல்வர் திரு. ரவீந்திரன் தெரிவித்தார்.

மூன்று பதிப்புக்கள் வெளியிடப்பட்ட இந் நூலில், தமிழ் ஈழத்தில் சிங்களக்குடியேற்றம் பற்றிய புள்ளி விபரங்கள் தரப்பட்டுள்ளதுடன், குறிப்பாக தமிழர் தாயகமாம் திருகோணமலை தமிழர் கையிலிருந்து எவ்வாறு படிப்படியாக பறிபோயிற்று என்ற உண்மையை விளக்குகிறது. தமிழர் தாயகம் காக்கப்பட வேண்டிய அவசியத்தையும் விளக்குகிறது.



யாழ்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில் நடந்த இலமுழக்கம் 22வது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவில் தந்தை செல்வா அவர்களின் உருவத்தை நெல் மணிகளால் ஆக்கிய ஓவியர் திரு ரீ.ரீ.ஆர் அவர்களுக்கு மில்க்வைற் அதிபர் க. கனகராசா அவர்கள் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கின்ருர்.

## அறிவித்தல்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேண்டுகோள்படி வவுனியா, திருகோணமலை மன்னர் மாவட்டங்களில் குடியேற விரும்பும் இளைஞர்கள் தமது பெயர்களை;

நிர்வாகச் செயலாளர்

தமிழ் இளைஞர் பேரவை,

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் பிரச்சினையில் கூட்டணித் தலைமை மிதவாதப் போக்கைப் பின்பற்றுகிறதாம்!

## இதற்காக அமிருக்கு 'சபாஷ்' போடுகிறது 'சன்'

தமிழீழத் தேசிய மன்றம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும் என்று தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் கொண்டுவந்த தீர்மானம் கூட்டணி மாநாட்டில் நிராகரிக்கப்பட்டதைப் பாராட்டியும், இப்பிரச்சினை மீது கூட்டணித்தலைமை மிதவாதப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்தும் ஆளுங்கட்சியின் ஊது குழலும் தினபதியின் சகோதர ஆங்கில ஏடுமான 'சன்' பத்திரிகை 9.8.77ல் ஆசிரியத்தலையங்கமே எழுதியுள்ளது. இத்தலையங்கத்துக்கு 'ஈழத்துக்கு ஒரு வீழ்ச்சி' One Down For Eelam என்று தலைப்பட்டுள்ளது.

குறித்த 'சன்' இதழின் தலையங்க விபரம் வருமாறு:

"எந்தவித பிரிவினை முயற்சியையும் முறியடித்து, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சமாதானம் நிலவச் செய்யும் பணியில் கடுமையாக நாம் உழைத்து வருகிறோம். இந்த இலட்சியத்தை நோக்கி ஒரு முன்னேற்றப்படியாக பதிவுப் பிரஜைகளுக்கும் வம்சாவளி பிரஜைகளுக்குமிடையே நிலவிய வேறுபாடு நீக்கப்பட்டுள்ளது.

இப்போது சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையேயுள்ள உறவில் ஒரு மெல்லிய புதிய ஒளி காணப்படுகிறது. இதை மூடியிருக்கும் மேகங்கள் மிக விரைவில் முற்றாக கலைந்து விடும் என்று எதிர்பார்க்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் தமிழ் ஈழத்துக்கான அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு உடனடியாகத் தமிழ்ஈழத்தேசிய மன்றத்தை கூட்ட வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணி கொண்டு வந்திருந்த தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையினால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

தேவையேற்படும்போது தக்கதருணத்தில் தமிழ்ஈழத் தேசிய மன்றத்தைக்கூட்டுவதென்று கூட்டணி மாநாடு தீர்மானித்திருந்தபோதிலும், இந்தப் பிரச்சினைமீது கூட்டணியிலுள்ள துடிப்புமிக்க இளைஞர்களைத்தவிர, ஏனைய அனுபவமும், புத்திக் கூர்மையும் கொண்ட தலைவர்கள் மிதமான கருத்தையே கொண்டிருக்கிறார்கள் என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமை, சுதந்திர இயக்கத்தை நடத்திவரும் முறையையிட்டு பெரும்பான்மையான இளைஞர்கள் அதிருப்தி தெரிவித்திருப்பது இயற்கையானதுதான். ஆனால் கூட்டணியிலுள்ள தீவிரவாத இளைஞர்களுக்கு அதிருப்தியளிப்பது எதுவோ, அது நாட்டு மக்களுக்குத் திருப்தி அளிக்கிறது; தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள பெரும்பான்மையோர் பிரச்சினைகளுக்கு அரசுடன் சமாதானமாக உடன்பாடு காணவே விரும்புகிறார்கள் என்பதே இதன் பொருளாகும்,

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவாகக் கூட்டணித்தலைமை செயற்படவில்லையென்றும், பிரச்சினையில் கூட்டணி அமைதிப் போக்கையே கடைப்பிடித்து வருவதாகவும் இளைஞர்கள் கூறினர். ஆனால் மக்களின் அபிலாஷைகளையிட்டு அளவுகோல் எடுப்பது யார்?

"தேசிய அரசுப்பேரவையில் அரசாங்கம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று கொண்டு வரப்பட வேண்டுமென்று கூட்டணியின் இளைஞர்கள் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவிடம் அதிமுக்கியமான வேண்டுகோள் ஒன்றைவிடுத்திருந்தனர். ஆனால் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் விஷயத்தை நன்கு அறிந்தவர் அத்தகைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு தேவையில்லையென்று அவர் அறிவித்துவிட்டார்.

தமது அதிருப்தியை வெளிப்படுத்திய அத்தனை இளைஞர்களையும் தன்னோடு வைத்திருக்கும் ஆற்றலுள்ளவராகத் திரு. அமிர்தலிங்கம் இருக்கிறாரென்பதே எமதும், அறிவுமிக்க பார்வையாளர்களினதும் கருத்தாக இருக்கிறது. கூட்டணியில் உள்ள சில தீவிரவாத இளைஞர்களால் ஏற்படவிருந்த ஒரு அபாயகரமான நிலையை தனது இராசதந்திரத்தினால் சமாளித்து விட்ட திரு. அமிர்தலிங்கத்துக்கு உண்மையில் இது ஒரு வெற்றியாகும்.

இரண்டு பக்கமும் உள்ள அரசியல் பெருந்தன்மையைக்கொண்டு, சிறிலங்காவின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படாமலும், மிதவாதப் போக்குடைய தமிழ் சிங்கள மக்களின் அபிலாஷைகளை ஈடேற்றும் வகையிலும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்னும் இடமுண்டு என்பதையே இது காட்டுகிறது.

—இவ்வாறு 'சன்' தலையங்கம் கூறுகிறது.

## தென்னாபிரிக்க தமிழத் தலைவருக்காக 'அம்னெஸ்டி' இயக்கம் குரல்கொடுக்கிறது!

தென் ஆபிரிக்காவில் ஐக்கிய இயக்கத்தின் தமிழ்த் தலைவர் திரு. சொனி வேங்கடரத்தினம் அவர்கள் 1971ஆம் ஆண்டு அங்கு நடைபெற்ற சதிமுயற்சி ஒன்றுடன் தொடர்புபடுத்தப்பட்டு சிலகாலம் நீதி விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டதோடு, மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதையும் செய்யப்பட்டார், பின்னர் 6 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இப்பொழுது அவர் 6வருட சிறைவாசத்தை முடித்த பின்பும் தென் ஆபிரிக்க அரசு அவரை விடுதலை செய்யாமல் இன்னும் சிறையில் அடைத்து வைத்து கொடுமைப்படுத்துவதோடு அவரது சிறைத்தண்டனையையும் நீதிமன்ற உத்தரவின்றி நீடித்துள்ளது. இதனால் இவரை விடுதலை செய்யுமாறு கோரி "சர்வதேச அம்னெஸ்டி" இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்தோடு மேற்படி அம்னெஸ்டி இயக்கம் உலக நாடுகளின் மனச்சாட்சி உள்ள தலைவர்களையும் மக்களையும் மேற்படி தமிழ்த் தலைவரை விடுதலை செய்யுமாறு தென் ஆபிரிக்க நீதியமைச்சரைக் கோருமாறும் கேட்டுள்ளது.

## பாராட்டு

29.7.78 திகதி ஆவரங்காலில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் தமிழ் தேசிய மன்றம் தக்க தருணத்தில் அமைக்கப்படும் என்ற பதத்தை எதிர்த்து வாக்களித்த மூவரையும் என்னைப்போன்ற ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது, குறிப்பாக செல்வி. திலகவதி கணபதிப்பிள்ளை ஆற்றிய உரையையும் காட்டிய எதிர்ப்பையும் நான் பாராட்டுகிறேன். இதைப்போல் தமிழ் ஈழத்தை அமைக்க காலம் தாழ்த்தும் ஒவ்வொரு நாளையும் தலைவர்களுக்கு அன்புடன் இடித்துக் காட்டிமிக விரைவில் தமிழ் ஈழம் அமைக்க ஒவ்வொரு இளைஞரும் இளம் மங்கையர்களும் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

—சி. நமசிவாயம்.

ஆறுமுகத்தான் குடியிருப்பு, செங்கலடி,

## ஆத்மசாந்திக்காக
## பிரார்த்தனை

திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றத்தினர் இம்மாதம் 17ம் திகதிநோன்மதி நாளன்று திருக்கோணேசர் ஆலயத்தில் காலை 8மணிக்கு கடந்த ஆகஸ்ட் 27 இனக் கலவரத்தில் இன்னுயிர்நீத்த அப்பாவித் தமிழ்மக்களின் ஆத்மசாந்திக்காகவும், பதிக்கப்பட்டோரின் மன அமைதிக்காகவும் ஒரு நினைவுப்பிரார்த்தனையும் விசேஷ பூஜையையும் ஒழுங்கு செய்துள்ளனர்.

## தார்மீகமாம் தார்மீகம்!

★ தவச பத்திரிகைக்கு 'சீல்' வைக்கப்பட்டது பற்றி குய்யோ முறையோ என்று வாயிலும்—வயிற்றிலும் அடித்துக் கொண்டது ஐ. தே. கட்சி, பதவிக்கு வந்த பத்து வாரங்கள் கூட ஆகவில்லை. 'ரைம்ஸ்' நிறுவனம் கூண்டோடு கைப்பற்றப்பட்டது. பத்திரிகை சுதந்திரத்துக்கு ஓங்கி ஒரு குத்து, இதற்கு பெயர் தர்மிஷ்டம்.

★ அபிவிருத்தியா—ஐயகோ மக்கள் உணவில்லாமல் எலும்புக்கூடாக மாறி விட்டார்கள். பசிக்கொடுமையால் தெருக்குப்பை வாளிகளை வழிக்கிறார்கள் என்று ஒப்பாரிவைத்தார்கள்தேர்தலுக்கு முன். இப்போது தட்டை மாற்றிப் போட்டுவிட்டார்கள். முதலில் அபிவிருத்தி அப்புறம்தான் மற்றது என்று சொல்லி விட்டது ஐ. தே. கட்சி, இதற்குப் பெயர் தர்மஷ்டம்.

★ மக்களுக்கு இலவச அரிசியை ஆதியில் கொடுத்த பெருமை ஐ.தே. கட்சிக்குத்தான் உரியது. பாதியில் வந்த சுதந்திரக்கட்சி அதைக்குறைத்து விட்டது துரோகம் என்றார்கள். இப்போது? மானியம் நாட்டைப் பிடித்திருக்கும் புற்று நோயாம். வெட்கம் இன்றி கூறுகிறார்கள். இதற்கு பெயர் தர்மிஷ்டம்.

★ சிறிமா ஆட்சி தாசா, எட்மன்ட் முதலாளிகளது ஆட்சி என்றார்கள். இவர்கள் இலட்சணம் என்ன? உபாலி, ஞானம் முதலாளிகளது சட்டைப்பைக்குள் இருக்கிறார்கள். இதற்குப் பெயர் தர்மிஷ்டம்.

★ பொருள் உற்பத்தி—விநியோகம் மக்கள் கையில் இது தேர்தலுக்கு முன். இப்போது சோசலிசம் என்ற வார்த்தையே அவுட்! கலப்படமற்ற உள்ளூர்—வெளியூர் முதலாளித்துவத்தையே தீப, தூப ஆராதனை, மலர்மாலை வரவேற்பு நடக்கிறது. இதற்குப்பெயர் தர்மிஷ்டம்!

## ஆனந்தகுமாரசாமி நூற்றாண்டு விழாவும் 'தமிழிசைத்தீபம்' வெளியீட்டுவிழாவும்

எதிர்வரும் ஆகஸ்ட் 18ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலே கலாயோகி ஆனந்தகுமாரசாமி நூற்றாண்டு நிறைவு விழா கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவிலே, பேராதனை வளாக— மருத்துவ பீட உதவி விரிவுரையாளர் திரு. சச்சிதா ஸ்ரீகாந்தாவால் எழுதப்பட்டுள்ள 'தமிழிசைத் தீபம்'— இசை விளக்க நூலும் வெளியிடப்படும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் தே.அ.பே. உறுப்பினருமாகிய திரு. மு. சிவசிதம்பரம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இவ் விழாவிற்கு, த.வி.கூ. கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ம.க ஈழவேந்தன் தலைமை தாங்குகிறார். மன்னார் தே. அ. பே. உறுப்பினர் திரு. பீ. எஸ். சூசைதாசன், கரவையூர் ச. ம. செல்வரத்தினம் அடிகள் ஆகியோரும் உரையாற்றவுள்ளார்கள்.

இவ்விழாவில்இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளிலே—பஞ்ச வாத்திய கூட்டியம், கட்டுப்பெத்தை வில்லிசைக்குழுவினரின் 'துஷ்யந்தன்—சகுந்தலை' அதி நவீன நகைச்சுவைக் கதாகாலட்சேபம், திரு. எஸ். வாசுதேவன் அளிக்கும் கொழும்பு வளாக மாணவர்களின் 'புத்தகப் பூச்சிகள்' நாடகம்; ஆகியவை முக்கியம் பெறுகின்றன.

'தமிழிசைத்தீபம்' நூலாசிரியர், 'சுதந்திரன்' வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர் [illegible] பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் அணிந்திருப்பது சிங்களவர் தோலினுல் செய்யப்பட்ட செருப்பு அல்ல! சாதாரண சிந்தெட்டிக்தோலினுல் ஆனதே"



## அமைச்சர் மத்தியூவின் கூற்றுக்கு யோகேஸ் சாட்டை!

யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களவர்கள் ஒரு சம்பலுக்கும் போதாது என்றும்; சிங்களவர்களைக் கொன்று அவர்களின் இரத்தத்தில் நீச்சலடிக்கும்வரை தமக்குத் தூக்கம் வராது என்றும்; சிங்களவர்களின் தோலை உரித்து அதில் செருப்புத்தைத்துப் போடவேண்டுமென்றும்; யாழ்ப்பாணத்தில் 1977 ஆடியில் நடைபெற்ற கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் முறையே திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், திரு. வி. யோகேஸ்வரன் ஆகியோர் பேசியதாக நாகவிகாரைப் பிக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதமொன்றை ஆதாரமாக வைத்து தேசிய அரசுப் பேரவையில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்தியூ சுமத்திய அவதூறுன கூற்றுக்கள் பச்சைப் பொய்யானவையென்றும் அபாண்டமானவையென்றும் தேசிய அரசுப்பேரவையில் திரு. அமிர்தலிங்கமும், திரு. யோகேஸ்வரனும் ஆணித்தரமாக மறுத்துள்ளனர்.

இதே கூற்றை அமைச்சர் பேரவைக்கு வெளியே கூறுவாராஞல், அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கவும், அமைச்சரையும் நாகவிகாரைப் பிக்குவையும் நீதிமன்றத்தில் சந்திக்கத்தயாராக இருப்பதாகவும் அவர்கள் சவால்விட்டனர்.

தேசிய அரசுப்பேரவை 11-8-78 காலை கூடியபோது யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன்முதலில்பேசினார். அவர் தமது பேச்சில் கூறியதாவது:-

"தமிழரக்கென்று ஒரு தனிக்கலாசாரம் உண்டு பண்பாடு தவருதவர்கள் தமிழர்கள், கலாச்சாரம். பண்பாட்டில் ஊறிய தமிழர்கள், வழிவழியாக அதில் ஊறித் திளைத்தவர்கள்.

"இப்பேரவையில் கடந்த செவ்வாய்க்கிழமை (8-ம் திகதி) உரையாற்றிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு, சிறில் மத்யூ; என்னைப்பற்றி மிகவும்பொருத்தமற்ற முறையில் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் காலத்தில், நாகவிகாரைக்கு அருகில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிங்களவரின் தோலை உரித்து அதில்செருப்புத் தைக்கவேண்டும் என்று நான் கூறியதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இதுஉண்மைக்குப் புறம்பானது; முழுக்கமுழுக்கப் பொய்யானது.

நடைபாதையிலிருந்து வாங்கிய சிந்தெட்டிக்தோலினுல் செய்யப்பட்ட செருப்பினையே நான் அணிந்திருக்கிறேன். இது பெர்மோசா நாட்டில் தயாரிக்கப்பட்டது.

இவ்விதமாக நான் கீழ்த்தரமாகப் பேசியிருந்தால், கலை,கலாச்சாரம் பண்பாட்டில் ஊறிய தமிழ்மக்கள் என்னை தங்களின் உறுப்பினராகத் தெரிவுசெய்து அனுப்பியிருக்கமாட்டார்கள்.

"எனது வீடு நாகவிகாரைக்கு அருகில்தான் இருக்கிறது. நான் மிகுந்த கடவுள் பக்தியுள்ளவன். மனதினுல்கூட ஒருவனுக்குத் தீங்கு செய்ய நினைக்காதவன் நான்.

"அமைச்சர் மத்யூ. என்னைப் பற்றி இப்பேரவையில் உரையாற்றுமல், பேரவைக்கு வெளியே இவ்விதமாகக் குறிப்பிட்டிருந்தால்,அவரை நான் நீதிமன்றத்தில் சந்தித்திருப்பேன்."

அமைச்சர் என்னைப் பற்றி உண்மைக்குப் புறம்பான முறையில் இப்பேரவையில் தெரிவித்த கருத்துப் பற்றி நான் சட்ட அறிஞர்களுடன் ஆலோசித்தேன். பேரவையிலன்றி பேரவைக்குவெளியே அமைச்சர் என்னைப் பற்றி இவ்விதமாக அவதூறுன முறையில் உரையாற்றியிருந்தால், அவர்மீது நீதிமன்றம் மூலம் வழக்குத் தொடர்ந்திருப்பேன் என்பதை ஒரு சவாலாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்;

"அமைச்சர் நினைப்பது [illegible] என்றும் அன்றும் இருக்கவில்லை; இன்றும் இல்லை; இனிமேலும் இல்லையென்பதையும், எமது கலை, கலாச்சாரம், பண்பாட்டுக்குப் புறம்பான கீழ்த்தரமான பேச்சை நான் எப்பொழுதும் பேசமாட்டேன் என்பதையும் பெருமையுடன் கூற விரும்புகிறேன்" என்று திரு. யோகேஸ்வரன் கூறினார்,


### அமிர்தலிங்கம் மறுப்பு

கூட்டணிச்செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு.அ: அமிர்தலிங்கம், அமைச்சர்மத்யூவின்கூற்றை ஆணித்தரமாக மறுத்துரைத்தார். அவர்நேற்றுப் பேரவையில் கூறியதாவது! "அமைச்சர் கடந்த 8ந்திகதி இங்கு ஆற்றிய உரையை "ஹன்ஸார்ட்'டில் பார்த்தேன். யாழ். நாகவிகாரைத் தேரோ கடந்த வருடம்நவம்பர் மாதம் 11ந் திகதி எழுதியிருந்த கடிதம் பற்றிஒருவருடத்திற்குப் பின்னர் அமைச்சர் பேரவையில் தெரிவித்துள்ளார். "நாகவிகாரைக்கு அருகில் நடந்த கூட்டமொன்றில் நான் எனது மனைவி குறிப்பிட்டதாகச்சில வார்த்தைகளை— நம்பமுடியாதவற்றைப்பற்றி அமைச்சர் மத்யூதெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களவர்கள் ஒரு சம்பலுக்கு போதாது என்றுநான் அக்கூட்டத்தில் கூறியதாகவும், எனது மனைவி, சிங்களவர்களைக் கொன்று, அந்த இரத்தத்தில் நீச்சலடிக்கபோவதாகப்பேசியதாகவும்அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இது உண்மைக்குப் புறம்பானது. நூற்றுக்குநூறு முழுப் பொய்! "நான் எந்தக் கூட்டத்திலும் பண்பாடற்ற முறையில் பேசுவதில்லை. அமைச்சர் குறிப்பிடும்கூட்டத்திலும் நான்பண்பாடுதவறிப் பேசியிருக்க மாட்டேன். எனது மனைவியும் அவ்விதமாகச் கூறியிருக்கமாட்டார். இக்கூற்றை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். "சன்சோனி கமிஷன் முன்பாகவும், பேரவையிலும் இப்பேச்சு இடம்பெற்றிருப்பதால் சட்ட நடவடிக்கைஎதுவும் எடுக்க முடியாதிருக்கிறது. பேரவைக்கு வெளியே அமைச்சர் அவ்விதமாகக் கூறியிருந்தால் சட்ட நடவடிக்கை எடுத்திருப்போம். 'எனதுமனைவிபற்றிஇப்பேரவையில் குறிப்பிட்ட அமைச்சர் மத்யூ, "திரு. அமிர்தலிங்கம் மறுத்தால் மட்டும் போதாது திருமதி அமிர்தலிங்கமும் இங்கு வரவேண்டும் என்று கூறியுள்ளார். அமைச்சர் கூறுவதுபோல, மனைவியை இங்கு கொண்டு வந்து விளக்கம் அளிக்கவும் முடியாது என்று திரு.அமிர்தலிங்கம் கூறினர்.

---

## நெஞ்சம் நிறைந்த அமரர் நாகநாதன்

இலங்கைவாழ் தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஏற்பட்டிருக்கும் சுதந்திர தாகமும் வீர உணர்ச்சியும் இதற்கு முன் என்றுமே ஏற்பட்டது கிடையாது. அகிம்சையே தனது ஆயுதம் சத்தியமே தனது இலட்சியம் என்று வாழும் தமிழ் மக்கள் தமது அடிமை நிலையை நன்கு உணர்ந்து தனது எதிரியை பூண்டோடு அழிக்கவல்ல அணுக்குண்டுகளான நமது வீர இளைஞர்கள் எரிமலையாக குமுறி எழுந்து இன உணர்ச்சி கொழுந்து விட்டெரிய உலகமே கண்டு அதிசயப்படத்தக்க முறையில் பல வீரத்தீரச் செயல்களை புரிந்து இலைமறை காய்போல் வாழும் இளைஞர்களை உருவாக்கியபெருமை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைவன் இரும்பு மனிதன் அமரர் டாக்டர் நாகநாதன் என்றால் அதையிட்டு பெருமைப் படாத இளைஞன் இருக்க முடியாது.



செய் அல்லது செத்துமடி சிங்களவனுக்கு அடிமையாக இருக்க முடியாது; பொறுத்தது போதும் பொங்கி எழடா தமிழா என்று போர்க்கொடி உயர்த்திய வீரத்தளபதி வேங்கை வேந்தன் அமரர் நாகநாதன் அவர்களின் நினைவு தினத்தை தமிழ் இனம் இன்று கொண்டாடுவதில் பெருமைப் படுகிறது,

டாக்டர் நாகநாதன் அவர்களின் நினைவு தினம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகம் வாழ் தமிழ் மக்கள் அனைவருக்குமே நீங்காத நினைவு நாளாகி விட்டது.

அமரர் டாக்டர் நாகநாதன் அவர்கள் அன்று பாராளுமன்றத்தில் கூறியபடி புலிக்கொடி நாட்டி தமிழ் ஆட்சி செய்த சோழப்பேரரசன் இராசராசசோழனின் வழி வந்த தமிழ் இனம் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் ஈழ தேசிய மன்றம் அமைப்பதற்கு பரிபூரண அதிகாரத்தை தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு கொடுத்திருந்தனர்; அந்த உரிமை தார்மீக அரசால் மறுக்கப்படுவதை நாகநாதனுல் பயிற்றப்பட்ட தமிழ் இளைஞர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்.

தன் கூரிய கண்களால் உற்று நோக்கி பற்களை இறுகக் கடித்த படி புயங்களை உயர்தியபடி வீர ஆவேசக்கனல்கக்கி தன்மான உணர்ச்சியை வளர்த்து தனி நாட்டுத் தீர்மானத்தை தமிழ் இனம் எடுத்த பெருமைக்கு உரியவர் நாகநாதன் என்பதை எந்தத்தமிழனும் மறுக்க மாட்டான். அந்த மா வீரரது அமரத்துவ தினமாகிய ஆகஸ்ட் 17ல் தனி நாடு நிறுவ உறுதி ஏற்போம்!

வாழ்க நாகநாதன்!

வளர்க இளைஞர் படை!!

வெல்க தமிழ் ஈழம்!

— ஆசீர்வாதம் ஹென்றி ச. நீ.
செயலாளர்
த. வி. கூ.
மானிப்பாய் தொகுதி

---

—1ம் பக்கத் தொடர்

ருப்பது மட்டுமன்றி அவர்களுக்கு மேலதிக அதிகாரமும் ஆட்பலமும் வழங்கப்பட்டுள்ளது.

வன்முறை எவரிடமிருந்து வந்தாலும் நிராகரிக்கப்பட வேண்டியதே. இருபதாம் நூற்றுண்டின் தேசியவாதத்துக்குமதிப்பளித்து அதைக் கட்டுப்படுத்துவதற்கும், சிங்களவர்களை சிங்களவர்களிடமிருந்தே காப்பதற்கும் ஒரே வழி தமிழர்களுக்கு உண்மையான சுயாட்சியை வழங்குவதேயாகும். கல்வி, நிர்வாகம், சட்டம், ஒழுங்கு, ஆகிய துறைகளையும் உள்ளடக்கியதாக இது இருக்கவேண்டும். இந்தக் கொள்கையை அண்மையில் பிரிட்டன்,இந்தியா, சூடான்; சோவியத் யூனியன் போன்ற நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

திரு. ஜெயவர்த்தன தனது வாக்காளர்கள் முன்பு ஒரு அருமையான வழக்கை முன் வைக்கவேண்டியவராக இருக்கிருர். இதை அவர் செய்து முடித்தாரென்றுல் அவர்மீது ஏற்றப்பட்டுள்ள 'அரசியல் ஞானி' எனும் பட்டத்துக்கு அவர் தகுதி படைத்தவராக உயர்வார்!"

இவ்வாறு அக்கட்டுரையில் திரு. ஹல் எழுதியுள்ளார்.

---

**சுதந்தரன் புதிய முகவரி**

**5, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.**

---

இப்பத்திரிகை கொழும்பு-12 194 ஏ, பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு! வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org